CC.No. 225/2014 (JM.No.II, DHARMAPURI)

22.01.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW–10 : திரு. கவின் (மருத்துவர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாப்பிரெட்டிபட்டி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2014 அன்று அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்த போது முத்துராஜ், வயது 30 த/பெ. தங்கசாமி என்பவரை அவரது தமயன் குருமூர்த்தி என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கத்தி மற்றும் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. வலதுபக்க த லையில் 8x2x1 cm என்ற அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. 2. தலையின் பின்பகுதியில் 6x1x1 cm என்ற அளவில் கிழிந்த காயமும், அதன் அருகில் 5x1x1 cm என்ற அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. 3. வலது பக்க காதில் 1x1x1 cm என்ற அளவில் கிழிந்த காயமும் காணப்பட்டது. 4. இடது பக்க தலையில் காதுக்கு மேலே 1x1x1 cm என்ற அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு CT Scan எடுக்கப்பட்டது. அதில் எந்தவித பாதிப்பும் தென்படவில்லை. மேலும் காது, மூக்கு,தொண்டை மருத்துவரின் பரிந்துரைக்காக அறிவுறுத்தப்பட்டது. அதில் வலது பக்க காதில் சவ்வு பகுதி கிழிந்து காணப்பட்டதாக அவர் கூறியுள்ளார். காயம் எண். 1,2,4 ஆகியவை சாதாரண காயம் என்றும், 3வது காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். முத்துராஜின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய தங்கவேல், வயது 50 த/பெ. கோவிந்தன் என்பவரை அவரது உறவினர் குருமூர்த்தி என்பவர் என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1. வலது பக்க தலையில் 2x1x0.5 cm என்ற அளவில் கிழிந்த காயமும், 2. இடது பக்க தலையில் 1x0.5x0.5 cm என்ற அளவில் கிழிந்த காயமும் காணப்பட்டது. மேலும் அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1,2 ஆகியன சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தங்கவேலுவின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய சின்னதம்பி, வயது 60 என்பவரை அவரது உறவினர் குருமூர்த்தி என்பவர் என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. இடது பக்க தலையில் 3x1x0.5 cm என்ற அளவில் கிழிந்த காயம் காணப்பட்டன. அவருக்கு CT Scan எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு பின்பக்க தலையில் எலும்பு முறிவும், இரத்த கசிவும் இருந்தது. மூளையில் அவருக்கு ஏற்பட்ட

காயம் 1 கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். சின்னதம்பியின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய சரவணன், வயது 32 என்பவரை அவரது உறவினர் குருமூர்த்தி என்பவர் என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. 1x1x0.5 cm என்ற அளவில் இடது பக்க கண்ணின் அருகே ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. மேலும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். MRI Scan எடுக்கப்பட்டது. அவருக்கு முகம் மற்றும் கண் பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் எலும்புமுறிவு காணப்பட்டன. மூளையில் ரத்த கசிவும் காணப்பட்டன. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1 கண் மருத்துவரின் அறிவுறுத்தலின் படி கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். சரவணனின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேலும் அதே வழக்கில் சம்பந்தமுடைய எல்லம்மாள், வயது 45 க/பெ. தங்கவேல் என்பவரை அவரது உறவினர் குருமூர்த்தி என்பவர் என்பவர் சிகிச்சைகாக அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவருக்கு தெரிந்த 4 நபர்கள் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் கட்டையால் தாக்கியதாக சொன்னார்கள். அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. 10x1x.05 cm என்ற அளவில் இடதுபக்க தலையில் கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு CT Scan எடுக்கப்பட்டது. அதில் எந்த வித பாதிப்பும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் 1 சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். எல்லம்மாளின் காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

முத்துராஜ், சரவணன், எல்லம்மாள், சின்னதம்பி, தங்கவேல் என்பவர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் நிறம் மற்றும் வயதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கரடு, முரடான பாதையில் இரவு நேரத்தில் வரும் போது தவறி விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். CT Scan, MRI Scan Report ஆகியவற்றை நீதிமனற்த்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சம்பவம் நடந்து 12 வருடங்கள் ஆனதால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

SUSHMITHA RAJAMANICKAM
Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.22 17:23:32 +0530